33-ஆம் ஞாயிறு பொதுக்காலம்

நீதிமொழிகள் 31:10–13, 19–20, 30–31;
1 தெசலோனிக்கர் 5:1–6; மத்தேயு 25:14–30

திருப்பலி முன்னுரை

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

ஒரு முறை ஒருவர் மிக விலையுயர்ந்த கருவிகள் சிலவற்றை விலைக்கு வாங்கினார். அவற்றை தம் மோட்டார் கொட்டகையில் (Garage) மிக நேர்த்தியாக அடுக்கி வைத்தார். அவை துருப்பிடித்து விடக்கூடாது என்பதற்காக தினமும் துடைத்து, மிகவும் பாதுகாப்போடு வைத்து தம்மைத் தேடி வரும் விருந்தினர்களிடம் பெருமையோடு காட்டி வந்தார்.

பல ஆண்டுகள் கழித்து, வந்த ஒருவர் அந்தப் பொருட்களைப் பார்த்து, "கருவிகள் இன்னமும் புதிது போல இருக்கின்றதே! மிகவும் கவனமாகப் பராமரிக்கிறீர்கள் போல இருக்கிறது! " என்றார். அதற்கு அந்த மனிதர், "ஆமாம், நான் இவற்றைஒரு போதும் பயன்படுத்தியதே இல்லை! " என்றுபெருமையோடுபதிலளித்தார்.

அங்கே ஒரு பெரிய சோகம் மறைந்திருந்தது: கருவிகள் பாதுகாப்பாக இருந்தன; ஆனால், அவை எதற்காக உருவாக்கப்பட்டனவோ, அந்த நோக்கத்திற்குப் பயன்படவே இல்லை!

இன்றைய நற்செய்தியில், இயேசு கிறிஸ்து நம் ஆன்மீக வாழ்க்கையிலும் இத்தகையதொரு தவறான போக்கு வந்து விடக்கூடாது என்று நம்மை எச்சரிக்கிறார்.

இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் திறமைகள், ஆற்றல்கள், வாய்ப்புகள், விசுவாசம், அன்பு, நேரம், இரக்கம், ஜெபம் மற்றும்பணி செய்யும் மனப்பான்மை ஆகியவற்றை ஒப்படைத்திருக்கிறார். இவற்றை நாம் பயத்தின் காரணமாகப் புதைத்து வைக்கக்கூடாது; மாறாக, இறைவனின் ஆட்சியின் வளர்ச்சிக்காக பலன் தரும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

நாம் வேறு யாராகவும் மாற வேண்டும் என்று ஆண்டவர் விரும்புவதில்லை. மாறாக, நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவற்றில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார். நம்முடைய திறமை பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ, பிறர்

கண்ணுக்குத் தெரிவதாகவோ அல்லது மறைவானதாகவோ, சுறுசுறுப்பான செயல்பாடாகவோ அல்லது அமைதியான ஜெபமாகவோ இருக்கலாம்; அவை ஒவ்வொன்றும் இறைவனின் பார்வையில் மிகவும் மதிப்புமிக்கவை. முதியவர்களும் நோயாளிகளும் இல்லங்களில் இருந்தபடியே செய்யும் அமைதியான ஜெபம் கூட, திருச்சபையில் அளப்பரிய நற்பலன்களைத் தரும்.

ஆனால், பல நேரங்களில் பயம் நம்மைத் தடுத்து நிறுத்துகிறது: தோல்வி பற்றிய பயம், பிறரின் விமர்சனம் பற்றிய பயம், நம்மிடம் இருப்பது மிகவும் சொற்பமானது என்ற பயம்.

எனவே, இந்தத் திவ்விய நற்கருணை மறைநிகழ்வில் பங்கேற்கும் முன், இறைவனின் கொடைகளைப் பிறருக்குப் பணி செய்யப் பயன்படுத்தாமல், நாம் புதைத்து வைத்த தருணங்களை நினைத்து மனம் வருந்தி, ஆண்டவரிடம் மன்னிப்பையும் அதற்கான துணிவையும் மன்றாடுவோம்.

மறையுரை:

"இயேசுவின் நற்செய்தி தரும் பேரானந்தம்"

ஒரு முறைஇளம் வயலின் கலைஞர் ஒருவர்இசைப் போட்டியில் பங்கேற்கச் சென்றார். அவர் திறமைசாலியாக இருந்தாலும், மேடை ஏறும் முன் மிகுந்த அச்சமடைந்தார். மேடைக்குச் செல்லும் முன் தம் ஆசிரியரிடம், "ஐயா, நான் தோற்றுப் போனால் என்ன செய்வது? " என்றுநடுக்கத்தோடு கேட்டார்.

அந்த முதிய ஆசிரியர் புன்னகையோடு அவரது கையில் வயலினை வழங்கி, "இந்த இசைக்கருவி பெட்டிக்குள்ளேயே பூட்டி வைப்பதற்காக உருவாக்கப்படவில்லை; இது வானளாவ இசைத்துப் பாடுவதற்காகவே உருவாக்கப்பட்டது! " என்றார்.

அதுவே இன்றைய நற்செய்தியின் மையக் கருத்து.

இயேசு நமக்குத் தாலந்துகள் பற்றிய உவமையை எடுத்துக் கூறுகிறார். இது பணத்தைப் பற்றியது மட்டுமல்ல; நம் வாழ்வைப் பற்றியது, நமக்கு

அளிக்கப்பட்ட கொடைகளைப் பற்றியது, சாத்தியக் கூறுகளைப் பற்றியது.

இறைவன் நம்மிடம் ஒப்படைத்ததை நாம் பயன்படுத்துவதாலும் அல்லது புதைத்து வைப்பதாலும் விளையும் மகிழ்ச்சி மற்றும் துயரத்தைப் பற்றியது.

இந்தஉவமைநம்முன்ஒருமுக்கியமானகேள்வியைவைக்கிறது:

ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்தவர் எவ்வாறு உண்மையான மகிழ்ச்சி நிறைந்தவராக வாழ முடியும்?

நாம் நேர்மையாகச் சிந்தித்துப் பார்த்தால், பல கிறிஸ்தவர்களின் முகத்தில் மகிழ்ச்சியைக் காண்பது அரிதாக இருக்கிறது. நாம் "நற்செய்தியை"ப்பறைசாற்றுகிறோம்; ஆனால், நமது விசுவாசத்தை ஒரு வரமாகக் கருதாமல், ஒரு பெரும் சுமையாகச் சுமந்து திரிவது போல வாழ்கிறோம். நம்மிடம் எத்தனையோ பாரங்கள், பயங்கள், குறைபாடுகள் மற்றும் சலிப்புகள் நிறைந்துள்ளன.

"மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்வின் ரகசியம் தான் என்ன? " என்று இன்றையநற்செய்திநம்மைவினவுகிறது.

இன்றைய நற்செய்தியில் இரண்டு முறை தலைவன் தன் பணியாளர்களிடம்:

"உன் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்" என்று கூறுகிறார்.

இயேசு இங்கேகடமையைப் பற்றியோ அல்லது கட்டாயத்தைப் பற்றியோ மட்டும் பேசவில்லை; அவர் மகிழ்ச்சியைப் பற்றிப் பேசுகிறார். தம் தாலந்துகளைப் பயன்படுத்திய பணியாளர்கள் தலைவனின் மகிழ்ச்சியில் நுழைகிறார்கள். ஆனால், தன் தாலந்தைப் புதைத்து வைத்த பணியாளனோ வெளிப்புற இருளில் தள்ளப்படுகிறான்.

ஏன்?

ஏனெனில், நம் வாழ்க்கை இறைவனுக்கும் பிறருக்கும் பயனுள்ளதாகவும், பலன் தருவதாகவும் மாறும் போதுதான் உண்மை மகிழ்ச்சி பிறக்கிறது.

உவமையின் தொடக்கத்தில், தலைவன் ஒருவன் தூரப் பயணம் மேற்கொள்வதைக் காண்கிறோம்.

நற்செய்தியின் குறியீட்டு மொழியில், இது கிறிஸ்துவையே குறிக்கிறது. இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு, அவர் முன்பைப் போல நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. இருப்பினும், அவர் புறப்படும் முன், தம் பணியாளர்களாகிய நம்மிடம் தம் உடைமைகள் அனைத்தையும் ஒப்படைத்துச் செல்கிறார்.

சிறிது நேரம் இதைச் சிந்தித்துப் பாருங்கள்!

விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரானவர் தம்முடைய பணிகளை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். "நமது கரங்களைத் தவிர ஆண்டவருக்கு வேறு கரங்கள் இல்லை! "

ஜெர்மனியில் உள்ள 'முன்ஸ்டர்' (Münster) நகரில் உள்ள ஒரு ஆலயத்தில் புகழ்பெற்ற சிலுவை உருவம் ஒன்று உள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட குண்டு வெடிப்பில், அந்தச் சிலுவையில் இருந்த இயேசுவின் இரு கரங்களும் உடைந்து போயின. போருக்குப் பின், மக்கள் அந்தக் கரங்களை மீண்டும் உருவாக்க வேண்டாம் என்று முடிவெடுத்தனர். அதற்குப் பதிலாக, அந்தச் சிலுவையின் கீழே இவ்வாறு எழுதினர்:

உமது கரங்களைத் தவிர எமக்கு வேறு கரங்கள் இல்லை

எவ்வளவு வியப்பான சிந்தனை!

இறைவன் நம்மைத் தேவை என்று தேர்ந்தெடுக்கிறார். நமது கரங்களின் வழியே அவர் ஆற்றுப்படுத்துகிறார். நமது வார்த்தைகளின் வழியே ஊக்கமளிக்கிறார். நமது தாராள மனப்பான்மையின் வழியே தேவைகளைச் சந்திக்கிறார். நமது இரக்கத்தின் வழியே காயங்களைக் குணமாக்குகிறார்.

பார்வையற்ற பர்த்திமேயு இயேசுவிடமிருந்து நேரடியாகப் பார்வை அடைந்தார். முடக்குவாதமுற்றவர் இயேசுவால் குணமாக்கப்பட்டார். விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் இயேசுவிடமிருந்து கண்ணியத்தைப் பெற்றார். ஆனால் இன்று, கிறிஸ்து தம் திருச்சபையின்

மூலமாகவும், சாதாரண விசுவாசிகளாகிய நம் மூலமாகவும் தம் பணிகளைத் தொடர்ந்து செய்கிறார்.

இந்த உண்மை ஒன்றே நம்மை மாண்பினாலும் மகிழ்ச்சியினாலும் நிரப்பப் போதுமானது! நாம் இறைவனின் ஆட்சியில் வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்கள் அல்ல; நாம் இறைவனின் கூட்டிணைப்பாளர்கள் (Collaborators).

புனித 23-ஆம் ஜான் பால் போப் ஆண்டவர் அவர்கள் இதை ஆழமாகப் புரிந்திருந்தார். அவர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அவர் முதியவராகவும் பலவீனமாகவும் இருந்ததால், அவரால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது என்றே பலரும் நினைத்தனர். ஆனால், அந்த எளிய முதியவர் நவீன வரலாற்றிலேயே மிகவும் அன்பிற்குரிய, மாற்றங்களை உருவாக்கிய திருத்தந்தையாக மாறினார்.

திருச்சபையை ஒரு அருங்காட்சியகம் போலப் பூட்டி வைக்காமல், 'இரண்டாம் வத்திக்கான் சங்கம்' என்னும் சாளரங்களைத் திறந்து புதுப்பித்தலைக் கொண்டு வந்தார்.

அவர் ஒரு முறை கூறினார்:

நாம் பூமியில் இருப்பது அருங்காட்சியகத்தைப் பாதுகாப்பதற்காக அல்ல; செழித்து வளரும் வாழ்வின் தோட்டத்தைப் பண்படுத்துவதற்காகவே!

இன்றைய நற்செய்தியில் வரும் முதல் இரண்டு பணியாளர்களும் அதைத்தான் செய்தார்கள். அவர்கள் வாழ்வைப் பண்படுத்தினார்கள். துணிந்து முதலீடு செய்தார்கள். தங்களிடம் இருந்ததைப் பயன்படுத்தினார்கள்.

ஆனால், மூன்றாவது பணியாளன் அதைச் செய்யவில்லை.

ஏன் செய்யவில்லை?

பயம்!

"நான் அஞ்சினேன்" என்று அவனே கூறுகிறான்.

நற்செய்தியில் கூறப்படும் உண்மையான அவலம் தாலந்து இல்லாதது அல்ல; வாய்ப்புகள் இல்லாததும் அல்ல; பயமே மிகப் பெரிய அவலம்!

தலைவன் ஒவ்வொரு பணியாளனுக்கும் "அவரவர் திறமைக்கு ஏற்ப" அளிக்கிறான். இறைவன் அரைகுறையாகச் செயல்படுபவர் அல்ல; அவர் நமக்கு அதிகமான சுமையை ஏற்றுவதில்லை. நம்முடைய பலம், பலவீனம், சூழ்நிலைகள், போராட்டங்கள், குடும்பக் கடமைகள், ஆரோக்கியம், வயது மற்றும் ஆளுமை ஆகியவற்றை அவர் நன்கு அறிவார்.

இறைவன் நமக்கு எதைச் செய்யும் ஆற்றலைத் தரவில்லையோ, அதை ஒரு போதும் நம்மிடம் கேட்கமாட்டார்.

அப்படியானால், நாம் நம்மைப் பிறரோடு ஒப்பிடுவதை நிறுத்த வேண்டும். ஒருவருக்கு ஐந்து தாலந்துகள், மற்றொருவருக்கு இரண்டு, இன்னொருவருக்கு ஒன்று கிடைக்கிறது. ஒப்பீடு செய்வது ஒன்று "என்னிடம் இவ்வளவுதான் உள்ளது" என்ற சலிப்பிற்கு வழிவகுக்கும், அல்லது "என்னிடம் பிறரைவிட அதிகமாக இருக்கிறது" என்ற அகந்தைக்கே வழிவகுக்கும். இவை இரண்டுமே மகிழ்ச்சியை அழித்துவிடும்.

இறைவன் என்னை வேறு யாராகவும் வாழக் கேட்கவில்லை. மாறாக, எனக்குக் கொடுக்கப்பட்டதைக் கொண்டு உண்மையுள்ளவனாக வாழவே கேட்கிறார்.

ஒரு ஆசிரியருக்கு இசை வராமல் இருக்கலாம். ஒரு மெக்கானிக்குக்கு நிர்வாகத் திறமை இல்லாமல் இருக்கலாம். தலைமைத்துவத்தில் திறமையுள்ளவருக்குப் பிறர் சொல்வதைப் பொறுமையாகக் கேட்கும் திறன் இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு மனிதருக்குள்ளும் பிறரின் நன்மைக்கான ஏதோவொரு அருள்கொடை மறைந்திருக்கிறது.

ஆபத்து என்பது குறைவாகப் பெற்றிருப்பதில் இல்லை; பெற்றதைப் புதைத்து வைப்பதில்தான் இருக்கிறது.

சில நேரங்களில் நமது திறமைகள் சிறியவை என்று நினைத்து நாம் புதைத்து விடுகிறோம்:

"என்னால் சிறிது மட்டுமே பாட முடியும்... "

"என்னால் ஜெபிக்க மட்டுமே முடியும்... "

"என்னால் பிறரை ஊக்குவிக்க மட்டுமே முடியும்... "

"எனக்கு இப்போது வயதாகிவிட்டது... "

ஆனால், நற்செய்தி வேறு ஒன்றைச் சொல்கிறது.

ஒருவேளை உங்களுக்கு நல்ல குரல்வளம் இருந்தால், அதை ஏன் ஆலயப் பாடகர் குழுவில் பயன்படுத்தக்கூடாது?

நன்றாக வாசிக்கத் தெரிந்தால், ஏன் இறை வார்த்தை வாசகராக மாறக்கூடாது?

ஒருங்கிணைக்கும் திறமை இருந்தால், ஏன் பங்கின் நடவடிக்கைகளில் உதவி செய்யக்கூடாது?

இளைஞர் பணியில் ஈடுபட்டு, குடும்பப் பொறுப்புகளால் விலகியிருந்தவர் என்றால், ஆண்டவர் மீண்டும் உங்களை அழைக்கக்கூடும் அல்லவா?

அதேபோல முதியவர்கள், நோயாளிகள், இல்லங்களில் முடங்கியிருப்பவர்கள் என்ன செய்வது? "எங்களால் இன்னும் என்ன செய்ய முடியும்? " என்றுஅவர்கள்சோகத்தோடுகேட்கலாம்.

அவர்களால் மிகப் பெரிய காரியங்களைச் செய்ய முடியும்!

ஒரு குரு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். அவர் ஒவ்வொரு மாதமும் நற்கருணை ஆண்டவரை எடுத்துக்கொண்டு ஒரு முதியவரின் வீட்டிற்குச் செல்வார். அந்த முதியவரால் நடக்க முடியாது; வீட்டை விட்டு வெளியேறவும் முடியாது. ஆனால், குரு உள்ளே நுழைந்ததும், பங்கின் செயல்பாடுகளைப் பற்றிவிசாரிக்கத் தொடங்கிவிடுவார்:

"எத்தனை குழந்தைகள் முதல் நற்கருணைக்கு ஆயத்தமாகிறார்கள்? "

"பாடகர் குழு எவ்வாறு செயல்படுகிறது? "

"பங்குப் பேரவைக்குத் தன்னார்வலர்கள் கிடைத்துவிட்டார்களா? "

"ஜெபம் தேவைப்படும் குடும்பங்கள் ஏதேனும் உள்ளனவா? "

ஒரு நாள் அந்தப் பங்குத் தந்தை, "ஏன் இதையெல்லாம் இவ்வளவு ஆர்வமாகக் கேட்கிறீர்கள்? " என்றுவினவினார்.

அதற்கு அந்த முதியவர், "அவர்களுக்காக நான் ஜெபிப்பதற்காகத்தான்! " என்றார்.

பின்னர், அவர்தம்முடைய "ஜெபப்புத்தகத்தை"காட்டினார். அது ஒரு அச்சிடப்பட்ட ஜெபப் புத்தகம் அல்ல; ஒரு பழைய நோட்டுப் புத்தகம். அதன் ஒவ்வொரு பக்கத்திலும் பெயர்கள், தேவைகள் மற்றும் தேதிகள் எழுதப்பட்டிருந்தன. நூற்றுக்கணக்கான பெயர்கள்! பல பதிவுகளின் அருகே: "பதில் அளிக்கப்பட்டது" என்றவார்த்தைஇருந்தது.

அதில்ஒரு பங்குத் தந்தையின் பெயர் இருந்தது: "அவர் தம் திருப்பணியில் மீண்டும் மகிழ்ச்சியைக் கண்டடைய வேண்டும். " – சில ஆண்டுகள் கழித்து அதன் அருகே: "பதில் அளிக்கப்பட்டது. "

கத்தோலிக்க விசுவாசத்தை விட்டு விலகியிருந்த அவருடைய மகனின் பெயர் இருந்தது. பதினைந்து ஆண்டுகளாகத் தினமும் ஜெபித்திருந்தார்: "அவன் மீண்டும் விசுவாசத்திற்குத் திரும்ப வேண்டும். " – ஒரு நாள் அதன் அருகே எழுதினார்: "பதில் அளிக்கப்பட்டது. "

ஒரு சிறிய அறையில் முடங்கிக் கிடந்த அந்த முதியவர், அந்தப் பங்கின் மிகவும் சுறுசுறுப்பான உறுப்பினராக விளங்கினார்! அவர் தம்முடைய துன்பத்தையும் தனிமையையும் இடைவிடாத மன்றாட்டாக மாற்றினார். தம் தாலந்தைப் பயன்படுத்துவதன் மகிழ்ச்சியை அவர் கண்டு கொண்டார்.

அதுவே கிறிஸ்தவ மகிழ்ச்சியின் மாபெரும் ரகசியம்: அது வெளிப்படையான வெற்றி அல்ல, பிறரின் பாராட்டு அல்ல; மாறாக, வாழ்வில் பலன் தருவதே ஆகும்.

தாலந்தைப் புதைத்த பணியாளன்எல்லாவற்றிலும் இருளையே கண்டான். தம் கொடைகளைப் புதைப்பவர்கள்பெரும்பாலும்கசப்புணர்வும், விமர்சிக்கும் குணமும், எதிர்மறை எண்ணமும் கொண்டு திருச்சபையையும் சமூகத்தையும் பிறரையும் குறை

கூறிக்கொண்டே இருப்பார்கள். ஆனால், தங்களைத் தாராளமாக இறைவனுக்கு வழங்குபவர்கள்எப்போதும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில்புனித பவுல் அடிகளார் கூறுகிறார்:

நீங்கள் அனைவரும் ஒளியைச் சார்ந்த மக்கள்! "

நெல்சன் மண்டேலா எழுதிய வார்த்தைகள்இன்றைய நற்செய்தியை அழகாகப் பிரதிபலிக்கின்றன:

துணிவு என்பது தொற்றிக்கொள்ளக்கூடியது; பயமும் அப்படித்தான்.

இயேசு தம் சீடர்களிடம் மீண்டும் மீண்டும் கூறுகிறார்: "அஞ்சாதீர்கள்! "

பயம் சொல்கிறது: "நான் தோற்றுப் போனால் என்ன செய்வது? "

விசுவாசம் சொல்கிறது: "என் வழியாகவும் இறைவன் மகத்தான காரியங்களைச் செய்ய முடிந்தால் என்ன செய்வது? "

வாழ்வின் முடிவில், இறைவன் நம்மைப் பார்த்து, "நீ ஏன் உலகப் புகழ்பெற்ற வெற்றியை அடையவில்லை? " என்றுகேட்கப்போவதில்லை.

மாறாக, அவர் எளிமையாகக் கேட்பார்:

"நான் உனக்குக் கொடுத்ததை நீ சரியாகப் பயன்படுத்தினாயா? "

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth, Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai